இந்து தமிழ் திசை

சென்னை வேல்ஸ் பல்கலைக்கழகம் சார்பில்

# நடிகர் சிலம்பரசன் உட்பட 3 பேருக்கு டாக்டர் பட்டம்

● மத்திய அமைச்சர் அனுராக் காணொலி மூலம் பங்கேற்பு

■ சென்னை

சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நடிகர் சிலம்பரசன், விளையாட்டு வீரர் மாரியப்பன் உள்ளிட்டோருக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

சென்னை பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 11-வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கே.கணேஷ் தலைமை தாங்கினார். இணைவேந்தர்கள் ஆ.ஜோதி முருகன் (திட்டம்), ஆர்த்தி கணேஷ் (கல்வி), வேல்ஸ் குழும நிறுவனங்களின் துணை தலைவர் ப்ரீதா கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மத்திய தகவல், ஒலிபரப்பு மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாகூர் காணொலி வாயிலாக தலைமை விருந்தினராக கலந்துகொண்டார்.

இவ்விழாவில் தொழிலதிபர் விஜி சந்தோஷம், நடிகர் சிலம்பரசன், 2020 டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பன் ஆகியோருக்கு தத்தம் துறைகளில் நிகழ்த்திய சாதனைகளை பாராட்டி கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ் பட்டங்களை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்களும், பட்டங்களும் வழங்கப்பட்டன. இந்த பட்டமளிப்பு விழாவில் காணொலி வாயிலாக வெவ்வேறு இளங்கலை, முதுகலை படிப்புகளில் 4,069 பேர் பட்டம் பெற்றனர்.




▲ சென்னை பல்லாவரத்தில் உள்ள வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனத்தில் 11-வது ஆண்டு பட்டமளிப்பு விழா நடந்தது. இதில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாகூர் இணைய வழியில் பங்கேற்று பட்டமளிப்பு விழா பேருரையாற்றினார். பாராலிம்பிக்கில் தங்கம் வென்ற மாரியப்பனுக்கு கவுரவ டாக்டர் பட்டத்தை வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ் வழங்கினார்.

படம்: எம்.முத்துகணேஷ்

மத்திய அமைச்சர் அனுராக் சிங் தாகூர் பட்டமளிப்புவிழா உரையாற்றிப் பேசியதாவது:

இந்திய தேசத்தின் வளர்ச்சியில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் பங்களிப்பு அதிகம். கணிதமேதை ராமானுஜன் தொடங்கி உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி சவுமியா சுவாமிநாதன், புகழ்பெற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனமான எச்சிஎல் நிறுவனத்தின் தலைவர் ஷிவ்நாடார் என பலரை குறிப்பிடலாம்.

இளைஞர்கள் கற்றக் கல்வியைக் கொண்டு இந்த உலகத்தை மாற்ற வேண்டும். தங்களுக்கு கற்றுக் கொடுத்த ஆசிரியர்களின் பங்களிப்புகளை அவர்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இன்றைய தொழில்நுட்ப வசதிகள் உடல்சார்ந்த செயல்பாடுகளை பெரிதும் குறைந்துவிட்டன. அதற்கு ஈடுசெய்யும் வகையில் தினசரி உடற் பயிற்சி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பல்கலைக் கழக துணைவேந்தர் எஸ்.ஸ்ரீமன் நாராயணன், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் நேரடியாகவும், காணொலி வாயிலாகவும் பங்கேற்றனர்.